



ஓலை 158| ஓசை 281| ஜனவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## தி. வே. கோபாலையர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று

இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றை விட்டுக் கடுமையான சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்கும் போது அவற்றை விட்டு காய்களைப் பறித்துத் தின்பதைப் போன்றது.


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

மரபு பா கற்போம்

# அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!

## பாவகை : கலி மண்டில (விருத்தம்) மண்டிலம்




கோள்களுக்குச் சீர்திங்கள் செங்கதிரே தாய்தந்தை
நீள்வானில் கார்முகில்க்கு வெயில்தென்றல் தாய்தந்தை
நீள்மலையும் அருவியுமே ஆற்றினுக்குத் தாய்தந்தை.
தாள்பதிக்கும் விலங்கிற்கு காடுகளே தாய்தந்தை!

மண்ணுயிர்க்கோ இயற்கையாவும் ஈடற்றத் தாய்தந்தை.
மண்ணுழவர் நெல்வயலின் மாண்புடைய தாய்தந்தை:
எண்ணெழுத்தே இலக்கியத்தின் சீர்மைமிகு தாய்தந்தை
கண்ணுக்குப் பார்வையீயும் கருமணியே தாய்தந்தை!

தொழிலுக்குத் தொழிலாளர் முதலாளித் தாய்தந்தை:
அழியாத கல்விக்கோ ஆசிரியர் தாய்தந்தை:
இழிவற்று ஆட்சியாளர் நாட்டிற்குத் தாய்தந்தை;
பழியின்றி வாழ்வோர்க்கு நன்னடத்தை தாய்தந்தை!

தாய்தந்தை பிள்ளையர்க்குப் பெரிதுவக்கும் முதல்தெய்வம்,
ஆய்ந்துணர்ந்த பிள்ளையர்க்கு வேறில்லை பிறதெய்வம்;
சேய்யாவும் காணுகின்ற கண்கண்ட முதன்மைதெய்வம்,
தாய்தந்தை தமைக்காக்கும் பிள்ளைகளும் சீர்தெய்வம்!




தனது கவிதைகளை
அகர முதல இலக்கியப் பேரவையில்
வெளியிட அனுமதி தந்த
நெருப்பலையார் ஐயாவிற்கு,
பேரவை சார்பாக
மனம் நிறைந்த நன்றி

* கலி மண்டில (விருத்தம்) மண்டிலம். - இலக்கணக் குறிப்பு:

நான்கடி தோறும் ஒவ்வோரடியிலும் நான்கு நான்கு காய்ச்சீர்களாக வந்து அடி தோறும் முடியும். நான்கடியும் ஓரெதுகைப் பெற்று வரும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் பொழிப்பு மோனைப் பெற்று வருதல் சிறப்பு. ஒவ்வோர் அடியின் ஈற்றுச் சீர் சந்த ஓசைப் பெற்றிருக்கும். ஒவ்வோரடியையும் மாற்றி மாற்றி கீழிருந்து மேலே, மேலிருந்து கீழே வாசித்தாலும் பொருள் மாறாது. ஆகவே, இப்பாடலை கலி மண்டில( விருத்தம்) மண்டலம் என்பர். மேலேயுள்ள பாடலில் பொருளுக்கு முதன்மை கொடுத்து பொழிப்பு மோனைப் பின்பற்றாத பாடல்களாகும்.

நெருப்பலைப் பாவலர் இராம.இளங்கோவன்

பா வகை: இன்னிசை வெண்பா


பாரதிரப் பைந்தமிழில் பாடியநம் பாட்டனைப்
பாரதியை நாளுமே பாட்டாலே போற்றுவோம்
பாரதத்தின் அன்னைக்குப் பாமாலைச் சூட்டியேச்
சாரதியாய் நின்றானைச் சாற்று.

நெஞ்சம் பொறுக்காமல் நீசரைச் சாடினான்
வஞ்சனைச் செய்வோரை வார்த்தையால் ஏசினான்
பஞ்சத்தில் மூழ்கியோரைப் பார்த்தே துடித்திட
அஞ்சலென்றப் பாட்டன் அறி.



கவிஞர் சே. கலைவாணி

# வாசித்து விட்டு சொல்லுங்கள்




1.வாசித்து விட்டு உடனடியாய் சொல்லுங்கள்
நேசித்து விட்டு அதனையே சொல்லாது
யோசித்து யோசித்தே சொல்லாத அந்நிலையை
வாசித்தேன் அவ்வுணர்வை என்று.

2.எழுத்து வடிவினில் அச்சிட்டு தாளில்
அழகாய் கவிதை வடிவினில் வந்து
இருக்குங் கவிதையை வாசித்து விட்டு
கருத்தினை சொல்லுங்கள் இன்று

3.தூரத்தில் நின்றவாறே கண்கள் இரண்டங்கு
ஆரத்தில் சந்தித்த நெஞ்சத்தின் காதல்
சுரத்தினை சொல்லாது விட்டேனோ என்று
கருத்தினை சொல்லுங்கள் இன்று

5.என்றோர் கவிதையுண்டு அக்குழந்தை ஈதென்ன
என்றாலோ ஈதென்ன என்கிறாள் அச்சச்சோ
என்றால் சிரித்துகொண்டே அச்சச்சோ என்கிறாள்
சொன்னதையே சொல்லுங் கிளி

6. நாசா செலுத்திய சேரா செயற்கைகோள்
லேசா நிலவினை தேடிகண்டு விட்டசெய்தி
இங்கெல்லா செய்திதாள்கள் சொல்கிறது எங்குயெங்கு?
இங்கு அவள்வீட்டில் தான்.

7.கேளிக்கை செய்து சிரித்தால்தான் லட்டுயென்று
கேளிக்கை செய்து விளையாடி கொய்வாள்
உளத்தையென்று ஒன்றொன்றாய் இக்கவிதை தன்னில்
களங்காது சொல்லிவிட்டேன் இங்கு.

பின் குறிப்பு: வெண்பா இலக்கணத்தில் எழுதப்பட்ட இக்கவிதை இதழகலி வகையை சேர்ந்தது.வாசித்தால் உங்கள் இரண்டு உதடுகளும் ஒட்டாது. வாசித்து விட்டு சொல்லுங்கள்.

கவிஞர் முனைவர். பு. பேச்சிமுத்து, விருதுநகர்

# தனிமை நமக்கான வரம்



நமக்கான தேவையின்போது
நமக்கான ஆறுதலுக்காகவும்
நம்மை வேதனையில் இருந்து பாதுகாக்க
எம்மை சூழ பல உறவுகள் இருந்தும்

அத்தருணத்தில் கைவிடப்படும் போது
நமது கண்கள் உணரும் கண்ணீரும்
நம் உதடுகள் பேச முடியாமல்
தவிக்கும் தவிப்பும்

தனியாக வாழ்வதல்ல தனிமை
தனிமை நாமாக நமக்குத்
தேடிக் கொள்வதும் அல்ல

நமக்கு பல உறவுகளால்
கிடைக்கும் ஏமாற்ற பரிசு
தனிமையால் பல கேள்விக்கு
விடை காண முடிகிறது

காயப்படுத்தியவர்கள்
வாழ்வு மகிழ்வாக இருக்கும்போது
காயப்பட்ட இதயம்
அனுபவிக்கும் ஒரு
கொடுமை தனிமை

முதுமையில்தான்
தனிமை என்பது அல்ல
இளமையிலும் தனிமை
கொடுமை தான்

துன்பத்தை வளர்ப்பதும்
துன்பத்தை தவிர்ப்பதற்கும்
தேவையான ஆயுதமும் தனிமையே

எமக்கு நினைத்துப் பார்க்க
அழகிய தருணங்களை தந்து விட்டு
நகர்ந்து சென்றிடாமல் கடந்து
வந்த வழிகளை
இனிமையாக்கிடுமே தனிமை

தனிமையும் ஒரு வகை
சுகமான சுகமே.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

# சுதந்திரம்

நீ சுவாசிக்க நேசிக்க
வாசிக்க வைத்த
சுதந்திரம்

அடிமை விலங்கினை
உடைத்தெறிந்த தியாகிகள்
போராடிய நாட்கள்
வீணாகப் போனதில்லை

இன்னுயிர் ஈந்திட்ட
வீரர்கள் எத்தனையோ
உதிரத்தை சிந்திய
மகான்கள் கணக்கிலில்லை

உணர்வான தேசத்தில்
கண்ணீர் பூக்களே
உறவான உள்ளங்கள்
ஒன்றிணைந்த களமே

ஒற்றுமை எண்ணங்களில்
வண்ணமான காவியமே
அடக்கு முறைக்கு அஞ்சிடாத
நெஞ்சத்தவர்கள்

காலிலிட்டு மிதித்தும்
கலங்கிடாத இதயத்தினர்
பரங்கியரைப் புறமுதுகிட்டு
ஓடச் செய்தவர்களே



வீரமுழக்கமிட்டு கருவறையில்
தோன்றிய நல்முத்துகள்
விடுதலை விரும்பிய
தேசத்தின் பக்தர்கள்

கவிதைகளில் அனல்
தெறித்த வரிகள்
தன்னலம் கருதாத
உத்தம புத்திரர்கள்

நீ சுவாசிக்க நேசிக்க
வாசிக்க வைத்த சுதந்திரம்
மறவாதே எந்நாளும்
தாய்நாட்டை மதித்திடவே

சுவாசக் காற்றில்
சுதந்திர மூச்சுக் கலந்ததே
பாடிடுவாய் சுதந்திரகீதமே
போற்றிடுவாய் நீயுமே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# சாத்தியமாகுமா?



எதுவும் புலப்படாத
பேரிருட்டில்
இலக்கின்றி எதற்காக
அம்புகளை
வீணாய் எய்கிறீர்கள்.

இருட்டின் குருதி
வெளிச்சமாய்ப் பீரிடுமென
நிர்மாணித்து எய்திருந்தால்
அது முற்றிலும் பிழையாகிடாதா?

உங்களைக் கண்டுகொண்ட
பின்னரே நிறைகுடமாய்
வெளிச்சத்தைக் கொண்டுவர
கிழக்கில் காத்திருக்கிறான்
ஆதவன்.

சுதி மாறாமல் துள்ளிவரும்
அலைகளின் வழியே
ஆழியைத் துறக்க முற்பட்டு
போராட்டக் குரல் கொடுக்கின்றன
நதிகள்.

அது சாத்தியமாகுமா?
நீங்கள் செய்கின்ற
செயலும் காரியமும்
அதுபோலத்தான்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தவமாய் தவம் இருந்து பெற்றெடுத்த ஆண் சிசு

பாவையவள் இனிமையான
சூழலில் வளர்ந்து பெரியவளாகி
திருமணம் செய்து கொண்டாள்
அதன் பிறகு நல்விதமாக
பெண் குழந்தையை ஈன்றெடுக்கிறாள்
அவளுக்கு சொல்ல முடியாத அளவிற்கு
பெரும் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது
ஆனால் எல்லோரும் அவளை
ஏளனமாக பேசுகிறார்கள்
உனக்கெல்லாம் ஆண் குழந்தை
பெற்றெடுக்க தகுதியில்லை
நீ ஒரு ராசியற்றவள்
உன் முகத்தில் முழிப்பதே பாவம் என்று
கேலி கிண்டலுமாக பேசி
அவளை மனதளவு புண்படுத்தினார்கள்
இதையெல்லாம் தங்கி கொள்ள முடியாமல்
உயிரை மாய்த்து கொள்ள நினைக்கிறாள்
அப்போது குழந்தையின்
அழுகை குரலை கேட்டு பதறி ஓடுகிறாள்
நமக்காக கடவுள் கொடுத்த
இந்த வாழ்க்கையை யாருக்காவும்
இழந்து விடக்கூடாது என்று சபதம் எடுத்தாள்
சில வருடங்களுக்கு பிறகு
சுக பிரசவத்தோடு
ஆண் வாரிசை
இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்துகிறாள்
இதுவே இவளின் எல்லாவற்றையும்
மாற்றிய தருணமாக கருதுகிறாள்.



கவிஞர் மோனிஷா

முகம் தெரியா முகங்கள்
அகமொன்றி கூட
கற்கை வரைந்த ஓவியம்.

பெரும் இரைச்சலில்லாமல்
மெல்ல முணுமுணுத்த புள்ளினம்.
புன்னகை பூத்த மலர்கள்.
காட்சிப் பிழைகள்



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# தோழன்





அன்பினாலே சேர்ந்திட்ட நட்பு வட்டம் ;
அரவணைக்கும் துயர்நீக்கும் இன்பச் சுற்றம் !

ஒன்றாக ஒருவயிற்றில் பிறந்த வரினும்
உணர்வினாலே கலந்திட்ட நண்பர் மேலார் !

இன்புற்ற வேளையிலே கேட்டை நாடின்
இகழ்ந்திடுவார் தெளிந்திடவே தீர்வும் சொல்வார் !

பொன்னென்னும் உறவினிலே விரிசல் வந்தால்
பொல்லனவாய் பகர்ந்திடார் புன்னகையில் வெல்வார் !

இன்பதுன்பம் இரண்டிலுமே துணையாய் நிற்பார் ;
ஏமாற்றம் வந்த வேளை அணைத்துக் கொள்வார் !

புன்னகையைத் தொலைத்திட்ட பொழுது களிலே
பூங்காற்றாய் நெஞ்சினிலே உலவி வருவார் !

சென்றிட்ட இளமைதனை மீட்டுத் தருவார் ;
சேர்ந்திட்ட சுமைகளையும் மனத்தில் களைவார் !

ஒன்றிட்ட துணையென்றே பிணைத்துக் கொள்வார் ;
உயிர்நண்பர் எந்நாளும் நீடு வாழி !

கவிஞர் ஆ சு கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

அதிகாரம் : 132



பிறபெண்டிர் உனைக்காண
விழிகளால் தழுவுவர்.
அருமையானவனே அதனாலே
தழுவிக்கூடினேன் நானுனையே.

ஊடல்கொண்ட என்னுடன்
தும்மலை காட்டினான்.
நீடுவாழ்க என்றுரைக்க
நினைத்து தும்மினானோ.

காதலன் மாலைசூடினான்
காதலியோ அவனழகை.
எவளுக்கோ காட்டச்சூடினதாய்
அவனிடம் கோபித்தாளே.

எவரிலும்மேலான காதலுண்டு
என்றவனை காதலி.
யாரைவிட என்றுகேட்டு
அவனோடு பிணக்கினாளே.

இப்பிறப்பில் பிரிவில்லை
என்றவனிடம் காதலி.
மறுபிறப்பில் பிரிவீரோ
என்றுரைத்து அழுதாளே.

நினைத்தேனடி என்றவனிடம்
எனில் மறந்தீரோ.
என்னை ஏன்மறந்தீரென்று
தழுவிடாது ஊடினாளே.

தும்மிய காதலனை
காதலி வாழ்த்தினாளெனினும்.
யார்நினைந்து தும்மினீர்
என்றுகேட்டு அழுதாளே.

தும்மல்வந்தும் அடக்கியவனை
வேண்டியவள் எவளோ.
நினைப்பதை மறைக்கிறீர்
என்றுரைத்து அழுதாளே.

காதலியை பணிந்து
ஊடலை போக்கியவனிடம்.
இதுபோல்தான் பிறபெண்டிர்
பிணக்குந்தீர்ப்பீரோவென கோபித்தாளே.

காதலியழகை ரசித்தவனிடம்
யாருடைய அழகோடு.
என்னழகை ஒப்பிட்டு
ரசிக்கின்றீரென கோபித்தாளே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# வண்ணம் தின்ற வாழ்விது



புலர்ந்ததும் இயந்திரமாய்க் கடப்பதால்
கணந்தோறும் கவிழும்
இயற்கையின் காட்சிகள்
எதையும் நோக்கவும் தேக்கவும் வாய்க்காத
வண்ணம் தின்ற வாழ்விது

எதுமெய்? எது பொய்?
எது தழல்? எது நிழலென்ற பேதம் கடந்து
அறியாமையெனும் அணைப்பின் புண்ணியத்தில்
அன்றாடம் அரங்கேறும் கூட்டல் கழித்தல்
எதுவும் புரியாத
புளகாங்கித வாழ்விது.

இருந்தும் கூட
இருப்பைத் தின்று
இன்னும் நீள்கிறது
எல்லோருக்கும் கனவு மட்டும்.

துளி நீராய்த் தேங்குமளவிற்குக்கூட
வாழ்க்கை நதி இங்கு வசப்படவில்லை.

உணர்ந்த பொருளை
உருத்தேற்றும் பழக்கமும் இங்கில்லை.
இப்படியான பொழுதோடு
புரண்டெழுந்த நாளொன்றில்.

தூரத்தில் உருண்டோடி
மெல்லிசை எழுப்பும்
நதியின் குறுநகை இப்போது
தடங்களின்றி என் செவிதனில் சேர்கிறது.

நேற்றும் பெய்த மழையில்
சொட்ட நனைந்த
கொல்லையின் மாமரத்தின் மீதேறி
சாளரம் கடந்து
கொஞ்சுகிறது இளந்தென்றல்.

பெருகும் இரைச்சலைத் தின்று
மரகதப் மணிப்புறாவின்
சிணுங்கலோடு சேர்ந்து
அலை அலையாய்ப் பரவுகிறது
"புத்தம் புதுக் காலை
பொன்னிற வேளையெனும்
இசைஞானி"யின் இசைக் கூத்து.

வெகு நாட்களுக்கு பிறகு
நடக்கும் மாயமென்பதால்
இப்படியொரு தருணம்
மீண்டும் எப்போது அமைமென்ற ஏக்கத்தில்
அதனை அப்படியே
என் விழிகளில் பதுக்கி வைத்துக்கொள்கிறேன்.

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# ஓலைக் குடிசைக்குள் நிலவு

ஓலைக் குடிசையில்
ஒன்ன பார்த்த அந்த
ஒரு விநாடி
உசிரு எனக்குள் இருந்ததா?
ஒரு தடவை
கிள்ளிப் பார்த்துக் கொள்கிறேன்
வலிக்கிறது உணர்கிறேன்

மின்னலே தோற்றுவிடும்
முக ஒளியால்
துப்பட்டை கொண்டு
முகத்தை மூடியது
தென்றலினால் சரிந்து
விலகிய அவள் வதனத்தை கண்டிட
வாய்ப்பு கொடுத்தது

இடையில்
ஓர் இடைவெளி
சறுக்கிடாதபடி
கரிய கூந்தல்
கம கம என வீசும் மலர்கள்
கூந்தலை இறுக்கி
தடவிகிட்டே இருந்தன

புன்னகை சிந்திடும்
அதரம் விரிந்து கொண்டிருந்து
காலையில் மலரும்
செவ்வந்தி நிறத்தில்
இடையோ இல்லை அங்கு
விடையோ நான் சொல்ல



கஞ்சன் கஞ்சனாகியே விட்டான்
இடையை கொடுப்பதில்
எத்தனை அழகு இவள்?
மனதில் சொல்ல
வெளியே தெரியும் மதியை
கயல்விழியால் நோக்கியதும்
மெலிதாக அவள் அதரம்
"வா வெண்ணிலா உன்னைத்தானே
வானம் தேடுதே"

ஆஆஆஆ என என் சப்தம்
அவள் திடுக்கிட
மெய்மறந்தது
நானா? அவளா?
அவள் பாடிய பாடல்
அரங்கில் ஏறுகிறது

கவிஞர் ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# சாதி

எல்லாச் சாதியைச்
சார்ந்தவர்களும்
தனித்தனியாக வசிக்கிறார்கள்
சமத்துவபுரத்தில்.



புதைப்பதற்கும் வழியில்லாமல்
வெளியேற்றுவதற்கும்
தைரியம் இல்லாமல்
எதிர்த்து போராட
களம் இல்லாமல்
அடக்கம் செய்ய முடியாமல்
ஆணவ அரியாசனம் போட்டு
மனதிற்குள் கிடக்கிறது
சாதி என்னும் பிணம்.


சாதியை அழிப்போம்
சாதியை ஒழிப்போம் என்றார்கள்.
தன் சாதிப்பெருமையைக் கொண்டு
பிற சாதியை அழித்தார்கள்; ஒழித்தார்கள்
பிரிவினை பாடையில் போட்டு

செத்த பிணங்களை
வாங்கி வயிற்றில் போட
எல்லா சாதிக்காரர்களும்
ஒற்றுமையாக வரிசையில் நின்றனர்.
இறைச்சிக் கடையில்.

பிணத்தை தூக்கிச் செல்ல
பாதை வேண்டும் என்று போராடியவர்கள்
பிணமாகிக் கிடக்கிறார்கள்
சாதியின் பாதையில்

கவிஞர் முனைவர். அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

# என்னவள்



எந்தன் காதல் நினைவுகளில்
அவள் தோல்விகளின்
வேதனைகளாய்

தொலைத்த அவளின் காதல்
தேடி தினந்தோறும் எனது
பயணங்கள் பரிதாபமாய்

அவளின் போலியான அன்பு
இரவின் மடியில் உறங்கும்
நிழல்களாய்

அழகாய் வந்தவள்
அநாதையாக்கி போனாள்
எனது உண்மை காதலை

தோல்வியின் தேரோட்டத்தில்
நான் ஊமையாக போன
உற்சாகமாய்

தேடுகிறேன் அவளது
நினைவின் பக்கங்களை
கிழிந்த காதல் புத்தகத்தில்

அவளது புன்னகையில் புண்ணாகி
போன காதல் என்றும்
என்னை தொடரும் சோகங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நான் மீள்வேனா



என் தோற்றத்தையும்
உடையையும் வைத்து
அங்கீகரிக்கும் சமூகத்தில்
பிறந்துவிட்டேன்

நம் உடல் உறுப்பினை வைத்து
கேலி செய்யுமே தவிர
ஒருபோதும் நம் பாதுகாப்பிற்கு
வேலி செய்யாது

சுதந்திரம் என்பது
நாம் வாழ்வதற்கேத் தவிர
வார்த்தைகளால் மற்றவர்களை
புண்படுத்துவதற்கு அல்ல.

வார்த்தைகளால் வரைந்து என்னால்
கோர்க்க இயலவில்லை
மீளமுடியாத பக்கங்களை

பலரால் கோடிட்ட
என் வாழ்க்கையை
சோற்றுபசையை வைத்தாவது
ஒட்டவேண்டாமா.


விஷத்தை கக்கும்
பாம்புகளுக்கு மத்தியில்
இரட்டை குணம் படைத்த
ஆமையாக இருந்துவிடுகிறேன்.

நீரிலும் வாழும் மண்தரையிலும்
வாழும் ஒருபோதும்
தன் இலக்கினை கைவிடாது.


மீள முடியுமா என்னும்
மீளாத பக்கங்களை
மீழ்ந்து வருவதே
இவளின் மீளாத கதை.

கவிஞர் ம. சந்தியா மனோகரன், சிவகங்கை

பரிசெனவே கொண்டாடு
பிரிதலின் தனிமையை
தீதானவர் நீங்குதல்
வாழ்க்கையில் நன்மையே!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)



வெற்றிப் பாதையாக
வெல்லும் வாழ்க்கை..
வீரங்களின் விளைச்சலில்
வீசட்டும் தென்றல்

மனமும் மாறட்டும்
மங்களமான எண்ணங்களே
மகத்துவத்தின் வீரியங்களாய்

தோல்வியைத் தோற்கடித்தே
தோரணங்கள் முனைந்தே
தோரணையில் சிம்மமாய்
தோப்புகளாய் பிறப்பெடுப்போம்


ஆலகால விருட்சமாய்
ஆவலாய் அச்சமில்லாது
ஆதாரங்களோடு எதிர்கொள்ள

மனத்தின் மாற்றங்கள்
மலைகளின் உயரங்களாய்
மங்கலமாய் குவிப்போம்
மட்டற்ற எல்லைகளாய்

விடியல் பூத்திட
விழியின் வெளிச்சத்தில்
விளைந்திடுவோம் வெற்றிகளை
விளைவிப்போம் மகிழ்ச்சிகளை


கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

நான் ஒரு ஆணாய் பிறக்க
பின் ஒரு பெண் ஆனேன்
வீணனாக நான் வீழவில்லை
முனிவற நோக்கி
என்னைக் கனிந்த தாயும்
நனி சால என்னை
அரவணைத்த ஐயனும்
வாழ்க! வாழ்க! வாழ்க!



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

பின் தொடரும் நிழலும்
வெளிச்சம் கண்டு மறையும்.
உண்மையான உறவுகளை
துன்பத்தின் போதே தெரியும்.



காலங் கடந்த பின்பு
சில காயங்கள் எதற்கென்று புரியும்.
தேடலின் ஊடே
உனக்கான உலகமும் விடியும்.

தாகித்திருக்கும் வாழ்வும்
இறை தரிசனத்தால் தணியும்.
மன்றாடிடும் போதே
மனப்பாரமும் குறையும்.

இறைவனிடம் தேடும் நிம்மதியில்
நெஞ்சமும் நிறையும்.
இருகரமேந்திப் பிரார்த்திடும்போது
சஞ்சலங்களும் சரியும்.


நன்மைகளைத் தேடிக் கொள்
உடலிலுள்ள உயிரும் ஒருநாள் பிரியும்.
உண்மையான வாழ்வு
மரணத்தின் பின்னே அமையும்.

கவிஞர் முபீதா அமீன், அக்கரைப்பற்று (இலங்கை)

# மாட்டுதோல் வாத்தியம்



இன்னிசை கருவிகளின் சத்தம்
விண்ணை பிளக்கிறது
மார்கழி ஆருத்ரா தரிசனத்தில்
மாட்டுத்தோலின் பறையிசையோ
ருத்ரதாண்டவம் ஆட வைக்கிறது
தில்லை நடராசன் எல்லையிலே
மாட்டுதோலின் இசையில் தீட்டொன்றும்
ஆகவில்லை கனகசபை நாயகனுக்கு
அவனை உற்சாகப்படுத்தி ஊர்வலமாக
அழைத்து செல்கிறது பறையிசை
நான்கு வீதிகளிலும் ஆட்கொண்டது
முப்பாட்டனின் தார்மிகு வாத்தியம்
நடராசன் வருகையை தெரிவித்து







கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்



மொழியினில்
இனிமையை விதைத்தவள்
மௌனமாய் எந்தன்
நெஞ்சத்தில் நிறைந்தவள்

சிறு விழிகளால்
சிறு பார்வை பார்த்தாள்
காதின் ஓரமாய்
அழகான கம்மலில்

அசைந்து கொடுக்கின்றாள்
இசைக்கு.
இவளின் ஒவ்வொரு அசைவிலும்
ஒவ்வொரு கவிதைகள்
புதிதாய் பிறக்கின்றன

பிறந்தவவை எல்லாம் இவளுக்காகவே
ஏங்கியும் தவிக்கின்றன.
இவள் புன்னகையில்
புதிதாய் இப்புவியினில்
தவழ்கின்ற மழலை தான்.

இந்த கவி வரிகளின்
ஒவ்வொரு மெட்டுக்களும்

கவிஞர் கு. ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி, மதுரை

**வைரவிழா காண்கின்ற இலக்குமியாலை பள்ளிகள் வாழிய வாழியவே!**

வாழிய, வாழிய, வாழியவே!
வையகந்தன்னில் அறுபது ஆண்டுகளாய்
வாழ்வளிக்கும் கல்வியை யாருக்குமிங்கு
இல்லையென சொல்லாது வழங்கிவரும்
இலக்குமியாலை மேல்நிலைப் பள்ளி
வாழிய வாழிய வாழியவே!

வாழிய, வாழிய ,வாழியவே,
வையகந்தண்ணில் எமதிந்த பள்ளி
தொடக்கப்பள்ளியாய்த் தோற்றம் கண்டிட
தோன்றலில் புகழுடையப் பெரியோர்களாம்
தாமோதரனார் தேவராஜுலு உழைத்ததனால்
தமியேன்மனமொழி மெய்யாலவரைப் பணிந்துவாழ்த்துகிறேன்;
வாழிய, வாழிய, வாழியவே!
வாழ்வளித்த அவ்வள்ளல்கள் திருப்பெயர்புகழுடன்
வையகம் வாழுவரை வாழியவே!




வாழியவாழிய வாழியவே யிந்தநகர்
வாழ்வோரின் வாழ்க்கை சிறந்திடவே
உயர்கல்வி தேவையென உணர்ந்த
உலகில் ஆடைகளில் முதன்மையுற்ற
உன்னத இலக்குமி ஆலை
முதலாளிகள் சகோதரர்கள் மூவரேனெனிலவர்
முயன்றுருவாக்கினர் எமதிந்த பள்ளியை;
மன்னவர்போலவர் வாழ்ந்தாலும் மனிதாபிமானம்
மிக்கோரவர் திருநாமங்களோ தேவராஜுலு,
சுந்தரம், இராஜகோபால் என்பதாமே!

சுந்தரத் தமிழில் அப்பெரியோர்
புகழினைப் போற்றிப் பாடிடுவோமவர்
புகழென்றென்றும் வாழியவாழிய வெனவாழ்த்திடுவோம்!
கோவில்பட்டியில் இன்றிந்தபள்ளிகள் சிறக்கவுழைத்திடும்
கோவிந்தராஜு லுயென்றயெம்செயலர் புகழும்வாழியவே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# தூரிகை வரைந்த காதல்



நிலவே! நினைவே!
நீங்கா என் முதல்
காதலே.

எழில் நினைவே
நெஞ்சின் நினைவில்
எழிலாய் நிலைத்தவளே.

கார் குழலை
காற்றசைக்க
கார் முகிலாய்
உடைந்தேன் நானே.

இதழ் பூ அவள் விரிக்க
இதய கமலம்
மணம் கமழுது தானே.

மான் விழியென்ன
தூரிகையோ,
ஓவியமாய் தீட்டிடுதே.

காரிகை அவள்
வான் தாரகையோ
பொன் ஒளி தீண்டிடுதே.

இமையின் அசைவில்,
அசையா சிலையென
நின்றேன்.

கானல் வீதியில்
கங்கையாய் நீ வர,
காதல் நதியில்
மிதந்தேன்.

ஏனோ என் நிலை
நானே மறந்தேன்!
என்னை, உன்னில்
இழந்தேன்.


மழையென பொழியும்
அன்பில், மலையென
உயருது காதல்.

மீண்டும் ஜனனம்
கொடுத்தாய்!
பிறவியின் பலனாய்
கிடைத்தாய்!

ஆதி காதலே,
காதல் அர்த்தமும்
காதலின் அந்தமும்
நீயே.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

கவிஞனானேன் நான்
நீ என்னை காதலித்ததால் அல்ல.
நீ மற்றொருவனை
காதலித்ததை கண்டு
என் கண்ணில்
கண்ணீர் வந்ததால்



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# காத்திருப்பின் சுகம்

காத்திருத்தல் யாருக்காக?
என்பதை பொறுத்து
காத்திருப்பின் சுகமும் மாறும்

அன்னைக்காக காத்திருத்தல்
அன்பும் அமுதமும் கிடைக்கும்
தெய்வத்தை தரிசித்த சுகம்


தந்தைக்காக காத்திருத்தல்
அறிவும் அரவணைப்பும் கிடைக்கும்
இறைவனே அருகிலிருக்கும் சுகம்

ஆசானுக்காக காத்திருத்தல்
அகிலத்தை வெல்லும்
வல்லமை கிடைக்கும்
அறிவாயுதம் பெற்ற சுகம்

கடவுளுக்காக காத்திருத்தல்
மனதில் உள்ளொளி உண்டாகும்
கடவுளே நானாக
நானே கடவுளான சுகம்

காதலிக்காக காதலனும
காதலனுக்காக காதலியும்
காத்திருத்தல் என்பது
காதலின் சுகமான அவத்தை

காத்திருப்பின் சுகம்
காத்திருந்தவர்களின் அனுபவம்
கட்டாயம் சொல்லும்



கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# தேடல்

ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும்
தேடல் மிக அவசியமாகுமே!
தேனிக்கள் தேடல்
உணவாகிய மகரந்தமும் தேனுமே!

நல் மாணவனின் தேடல்
பல நூல்களை தேடியே!
விஞ்ஞானியின் தேடல்
புதுபுது கண்டுபிடிப்புகளே!

விவசாயின் தேடல்
வீரியமுள்ள உணவுப் பயிர் செய்வதே !
பண்டிதனின் தேடல்
ஞான நூல்களை படிப்பதே!

இளைஞனின் தேடல்
நல்ல கன்னிகையே!
இந்த மானிடப் பிறவியை
நல்வண்ணமாய் கழிப்பது எப்படி ?
தேடலில்தானே ஒரு விடை கிடைக்கும்!
அதனால் தேடல் அவசியமானதே !

தேடல் ஒரு பொருளுடன் விடாது
பலவற்றை தேடச் சொல்லுமே!
எதை சாதிக்கப் பிறந்தோம்?
நம் வாழ்க்கை செம்மையாகும் வரை தேடு!
செம்மையானால் தொடர்ந்து ஓடு!
முடிவு! உன் தேடல்
வெற்றியுடன் பூர்த்தியாய் நிற்குமே!



கவிஞர் கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# தாலாட்டு

சோலைமலரே சொக்கத்தங்கமே
என் கண்ணின்மணியே! செல்லதங்கமே!
கண்ணுறங்கடி என் கட்டி தங்கமே
வண்ணக்கிளியே வாசக்கொடியே
என் வாசல் வந்த முத்துரதமே
வானத்து சந்திரனோ உனை
பார்த்து கண்சிமிட்ட
பூக்களின் வாசமெல்லாம் உன்
வாசத்தில் மயங்கி நிற்குதடி
உன் செம்பவழச் சிரிப்பிற்கே
சீர் கொண்டு வந்தாரோ
என் சித்திரச் செல்லம்மாவே
சிங்காரப் பேரழகே
உன் தத்தை மொழி கண்டு தமிழ்
மொழியும் திணருதடி
முத்தான முத்தழகே
முழுமதியாள் முழுமனதாய்
உன்முகத்தில் ஒளிர்ந்தாளோ.
உன் எச்சில் முத்தம் பூச என்
முகதான் தவமிருக்கு
கதிரவனை காண காலையில்
விழித்தெழடி என் கண்மனியே
கண்ணே கனியமுதே காலத்தின்
பூந்தென்றலே
தென்றல் தாலாட்ட பூஞ்சிட்டு
நீயுறங்க பூமுகமும் மலர்ந்ததடி
என் செல்வக்களஞ்சியமே
பைந்தமிழே பசுங்கிளியே
உன் மழலை மொழி கேட்டு



மயங்காதோர் யாரும் உண்டோ
ஆராரோ நான் பாட என்செல்லம்
கண்ணுறங்கும் கவிதையடி
தாலாட்டி கவிபாட தங்கத்
தமிழிருக்க தங்கமே
செங்கரும்பே சிணுங்காமல்
உறங்கடி என் தமிழ்மகளே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# இளைஞர்கள் என்னும் பெரும் சக்தி

நாளை சமூகம்
நலமோடும் வளமோடும்
தலை முறை காக்கும்
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே.

ஆக்க சக்தியும்
அறிவுப்பூர்வ செயல்பாடும்
சிந்தனையில் உயர்வும்
சமூக வளமும் மேம்பட்டு மிளிர
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே..



கல்வியிலே உயர்வு
மருத்துவத்தில் சாதனை
வல்லரசு நாட்டின்
வளமான நம்பிக்கை
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே.


போதையற்ற பாதையை
இல்லாமல் செய்தே.
பாரதத்தை உயர்த்தும்
வலிமையும் செயலும்
கட்டமைக்கும்
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே.

இயற்கை என்னும் பேராற்றலை
மாசில்லாமல் போற்றிடவும்
சமூக சேவையும் மொழி உணர்வும்
கண்களாய் கொண்ட
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே.

நாளைய சமூகத்தின் உயர்வுக்கும்
உழைத்து வரும் தலைமுறைக்கும்
ராஜபாட்டை அமைக்கும்
"இளைஞர்கள் என்னும்
பெரும் சக்தி" ஒன்றே.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# கன்னீர்துளி



கண்ணீர்துளியும் கசங்கலோடு
கடுந்துன்பத்திலுருக்கும்போதே
கதறிய வார்த்தைகளோடு

கடகடவென்றே கரைந்துவிழுதே
கடிவாளம்போடமுடியாதே துன்பத்திலுமே
கனிவான நேரத்திலே ஆனந்தமாக
கடும்வலியதிலே வழிதேடியே

கடும் சொல்லிலே சோதிப்பதாக
கனநேர மனவலியை
கரிக்கும் நீரதனால் கழுவிடலாமே

கரு பெயர்ந்து உயிராக ஜனித்திடும்போது
கத்திய கூவலோடு; கடுஞ்சிறு உயிரும்
கவியழுகையோடே மகிழ்வித்திடுமே!

கட்டினவனின் கடுமைக்கு கதையளப்பதாக
கடிகாரமுள்ளின் சுழற்சி வாழ்விலே
கவனிப்பாரற்ற உறவுகளின்
கழிக்கும் வார்த்தைக்கும் மௌனமாக


கசிகின்ற நீர்த்துளியே பிறர்அறியா
கவலையாக மறைத்திட்டு
கவனமுடன் கலகலப்பாக இருந்திட்டு
கருவிருளில் கம்மென்றே துளைத்திடுவோமே

கரந்திடும் மழைதுளியா கண்ணீரும்
கனத்திடும் இதயத்தின் உயிர்துளியது
கள்ளமில்லா மனதிலும் ஊறிடுமே
கபடத்தாலே களியாட்டம் ஆடிடுமே

கடைசி மூச்சு உயிர் உடலோடு
கடந்து சென்ற பின்னும்
கலந்திடும் கூட்டத்திலும்
கடலலையான கண்ணீரோடே!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

பாதைகள்
அனைத்தும்
அலைபேசியின்
கட்டமைப்பில்
வாகனங்களுக்கு
வழிகாட்ட
வெறிச்சோடியது
வீதிகள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

## அங்கேயும் இங்கேயும்

திட்டமிட்ட
திட்டமிடா
நெடியமூச்சு முட்டும்
செய் பணியிலிருந்து
ஒருநாள் வார விடுமுறையில்
விடுதலை பெற்று



சொந்த இல்லத்தின் வாசலில்
அமைதியாய்
காப்பி கோப்பையுடன்
நிதானமாய் வெளியுலகம்
பார்த்து
பழைய நாட்களை
அசை போடலாம்
என உவகையாய்
சனி மாலை எண்ணம்

ஆனால்
விழிப்பிலிருந்து
காலைக்கடன் முடித்தல்
பத்திரிகை வாசித்தல்
உண்ணல்
தொலைக்காட்சி காணுதல்
உறவுகளோடு உதட்டு
மொழி என இருந்தாலும்

கூடவே தொடருகின்ற
நாளைய செய் பணி
இலக்கு
பயபதற்ற
சிந்தனைகள்
வார விடுமுறை நாளன்றும்
தவிர்க்க முடியாதாய்

# என்ன செய்வது?

அவளுக்காக விண்மீன் பிடிக்க சென்றேன்
அவள் கண் முன்னே என்னால்
பிரகாசிக்க முடியாது என்று பின் வாங்கியது.

மலர்கள் பறிக்க சென்றேன்
அவள் கூந்தல் என்னிடம் சண்டையிடும் என்றது.

கம்மல் வாங்க சென்றேன்
அவள் கன்னத்தில் முத்தமிட்டால்
எனக்கு தூக்கு தண்டனை உறுதி என்றது.



புடவை வாங்க சென்றேன்
அவள் மேனியை உரசினால்
என்னை துவைத்து கிழித்து விடுவாள்
என்று மறுத்தது.

வளையல் வாங்க சென்றேன்
வலையலோ அவள் இரு கைகளை
அழுத்தி பிடிக்க தைரியம் இல்லை
என்று பின் வாங்கியது.

கொலுசு வாங்க சென்றேன்
நான் சத்தமிட்டால் தேவதையை
காட்டி கொடுத்து விடுவேன் என்று
காலை வாரியது.

குங்கும பொட்டு வாங்க சென்றேன்
அவள் நெற்றியின் நடுவில் ஒட்டிக் கொண்டால்
இரு புருவமும் என்னை அழித்து விடும் என்று
என்னை துரத்தியது.

என்ன செய்வது அவளுக்காக
எதுவும் வாங்க முடியாமல்
நூல் அறுந்த பட்டம் போல்
என் மனம் காற்றில் அல்லாடியது.

கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

# சொல்லாத சிந்தனைகள்

சொல்லப் பயந்த உண்மைகள் இதயத்துள்
ஒளிந்திருக்கும் சொல்லாத சிந்தனைகளாய்!
மௌனத்தின் மொழியில் மனத்தின் கவிதைகள்!
ஆழ்மனத்தில் உதித்து உறைந்திருக்கும் எண்ணங்கள்!
காலத்தின் அலையில் கரைந்திடும் சிந்தனைகள்!
கேட்கப் படாத கேள்விகளும் அக்கேள்விகளுக்கு
உரைக்க முடியாத பதில்களும் இதயத்துள்
உறைந்திருக்கும் முகவரியில்லாக் கடிதங்கள் போலே!
பார்வைகள் பரிமாறத் தவறிய உணர்வுகள்
சேர்ந்திடும் இவ்வகையில்! இவ்வகை சிந்தனைகளை
உரைப்பதைவிட உணர்கையில்தான் அர்த்தம் பெறும்!
சொல்லாத சிந்தனைகள் அனைவரிடம் உண்டிங்கே!
சொல்லாத சிந்தனைகளை சொல்லமுயலும் கவிதையிது!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# விடை கிடைக்குமா?

சகிப்புத்தன்மையை
நிறையவே
கற்றுக்கொண்டிருக்கிறேன்
ஆனாலும்
தண்ணீர் காட்டுகிறது மனசு.
முகத்தை காட்டுங்கள் என்றேன்
அவர்களோ
முகமூடியை காட்டுகிறார்கள்
தீர்வுகளை தாருங்கள் என்றேன்
அவர்களோ
சிக்கல்களை
பரிசளித்துச் செல்கிறார்கள்.
அந்திக்கடை
வியாபாரம் கணக்காக
கேள்விக்குள்ளாகிறது
நம்பிக்கைகள்.
குழம்பி நிற்கும் போது
மௌனங்களின் ஆடைகளை
கடன் வாங்கி
உடுத்திட வேண்டியுள்ளது.
நிதர்சனங்களை
மாற்றிடயியலுமா என்ன?!
ஒருவேளை
மானுடப் பயணங்கள்
காலப்போக்கில்
புதிர்களுக்கு விடை கண்டால் சரி!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

மும்பை அகில உகில சத்திரபதி சிவாஜி மஹாராஜ் விமான நிலையத்தில் இறங்கிய விமான நிலையத்தில் நெய்லியும் அவளோடு லண்டனிலிருந்து வந்த குழுவினரும் இறங்கி அங்கிருந்து உள்ளேயிருந்த பேருந்தில் ஏறி வேறு விமானத்தில் (டிரான்ஸ்பர் டெஸ்க்) ஏறுவதற்காக விமான நிலையத்திற்குள் வந்த போது, கவிதா (வசந்தின் காதலி)வின் அலை பேசி எண் அலற, நெய்லி எடுத்துப் பேசினாள்.

"என்ன கவிதா சொல்லு? என்ன செய்தி?" என்றாள் நெய்லி.
"எங்கே இருக்கிறாய் நெய்லி?"
"மும்பை ஏர்ப்போர்ட்டில் இருக்கிறேன். என்னப்பா ரொம்ப பதட்டமாக இருக்கிறாய். என்ன செய்தி?"

" நேற்று சாயங்காலத்திலிருந்து வசந்த் அலைபேசி வேலை செய்யவில்லை என்று நினைக்கிறேன். உங்கள் நரேனுக்கு வேறு அலைபேசியில் முயன்று பார்த்தேன். அவரும் மருத்துவ மனையிலிருக்கிறார் என்று நீனைக்கிறேன். அவரும் போனை எடுக்க மாட்டேன் என்கிறார். நாம் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகி விட்டதோ என்று பயமாக இருக்கிறது." கொஞ்சம் பதட்டத்தோடு பேசினாள் கவிதா.

"ஏய்.. ஒன்றும் கவலைப்படாதே. அலைப்பேசியில் என்ன பிரச்சினையோ?"
"ஆமாம். நீங்கள் எங்கே... மும்பை பக்கம்?"

"ஓ! உனக்கு செய்தி தெரியாதா?. நாம் கை நீட்டி அட்வான்ஸ் வாங்கினதால அந்த லண்டன் மெடிக்கல் கம்பெனி க்ரூப் நம்மள வெரட்ட ஆர்ம்பிச்சிருச்சு. சொல்லி சொல்லிப் பார்த்தேன். கேட்கல, என்னையும் கூட்டிகிட்டு நேரே களக்காட்டிற்கு கிளம்பிட்டாங்க."

"ஆமா, மும்பைங்கிறீங்க"

" இங்கேயிருந்து அடுத்த பிளைட் தூத்துக்குடி.. அங்கேயிருந்து நேரே காரிலே களக்காடு" பெருமூச்சு விட்டாள் நெய்லி.

கவிஞர் இரஜகை நிலவன்

"சரி. அங்கே போய் என்ன செய்யப் போறீங்க?"

"அது தான் எனக்கும் புரியவில்லை. நரேன் வேறு ஆஸ்பத்திரியிலே இருக்கார். வசந்தோட போன் வரலங்கிரே... அங்கே போய் என்ன செய்யப் போறோம்கிறத நெனச்சா தான் மலைப்பாக இருக்கிறது. அவங்க வேற தொண தொணண்ணு என்னாச்சு. ஆல காலச் செடி கிடைச்சிதான்னு தொளச்சித் தள்ளுறாங்க.

ம்ம்ம்ம். அங்கே போய் பார்க்கலாம். நீ ஒண்ணு பண்ணு. ஆபீஸிலே லீவு போட்டுட்டு உடனே கெடைக்கிற சென்னை பஸ்ஸிலே புறப்பட்டு களக்காட்டுக்கு வா. நாளைக்கு காலையிலே அங்கே சந்திக்கலாம்"
"ம்ம்ம் பார்க்கிறேன். நெய்லி. இங்கே லீவுன்னாலே ஒரு மாதிரி பார்க்கிறானுக. சரி ஏதாவது சொல்லி சமாளிச்சிட்டு வர்றேன்"

"சரி. நரேன் கிட்ட சொல்லி உனக்கும் ஹோட்டல் ரீமாவில் ரூம் போடச் சொல்றேன். வந்து எறங்கினதும் போன் பண்ணிட்டு நேரே ஹோட்டலுக்கு வந்துடுடி. அப்புறம் என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்"
"சரி "என்று போனை வைத்தாள் கவிதா. உடனே அலைபேசியில் நரேனை அழைத்தாள் நெய்லி.

"என்ன நெய்லி. எங்கே இருக்கீங்க? என்ன அந்தப் பசங்க ரொம்ப வெரட்டறாங்களோ?" என்றான் எதிர் முனையில் நரேன்.
"ஏய். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அது சரி வசந்த், காட்டுக்குள்ளே போய் ஆலகாலச் செடியைப் பிடுங்கிட்டு வரப்போறானாரே, என்னாச்சு?"

"அதுதான் எனக்கு கொஞ்சம் கவலையாக இருக்கிறது. இந்தா செடியப் பாத்துட்டேன்னு போன் பண்ணினான். அப்புறம் அவன் போன் அடித்துக் கொண்டிருந்தது. அவன் பேசவே இல்லை. இப்போ என்னனண்ணா போன் ஸ்விச் ஆஃப்ணு வர்து. அதில வேற என்ன ஆச்சரியம்னா, அவனைக் கூட்டிடுப் போன ரமணிங்கிற ஆட்டோ காரன் போனும் ஸ்விச் ஆஃப்ணு வருது. நான் வேற ஆஸ்பத்திரியிலே எழும்ப முடியாமற் கிடக்கிறேன்"

"சரி.. நாளைக்கு நாங்கள் அங்கே வந்து விட்டு என்ன செய்யட்டும்?"
"ஒண்ணு பண்ணுங்க. நேரா ஹோட்டலுக்குப் போய் ஃப்ரஸ் அப் ஆகிட்டு ஆஸ்பத்திரிக்கு வாங்க. என்ன செய்யணும்னு முடிவு பண்ணுவோம். என்னால எழும்ப முடிஞ்சா" என்று அவன் முடிப்பதற்குள்.

"உனக்கு அவ்வளவு பலமான அடியா?"
"அப்படின்னா நீ நம்பலியா?. யானை தூக்கி வீசியிருக்கிறது. வா! நேரிலே வந்து பாத்தியண்ணா எல்லாம் புரியும்"

"எலும்புலே ஏதாவது"
"நல்ல வேளை. விழுந்த எடத்துல செடியும் செத்தையும் கெடந்ததினால எலும்பு முறிவு ஒண்ணுமில்ல"

"எக்ஸ்ரே எல்லாம் எடுத்துப் பாத்தாச்சா?"
"எல்லா செக்கப்பும் முடிஞ்சாச்சு. அடிபட்டதில எழும்பி நடக்க முடியல. வா... எல்லாம் நாளைக்குப் பாக்கத்தான போற"

"ஆங், சொல்ல மறந்துட்டேன். நாளைக்கு கவிதாவும் அங்கே களக்காட்டுக்கு வாறா. அவளுக்கும் நாங்க தங்கிற ஹோட்டல் ரீமாவில ஒரு ரூம் போட்டுடு"
"அவ எதுக்கு இந்த நேரத்தில...?"

"ஏற்கனவே வசந்த் போன இடத்தில என்ன ஆச்சோண்ணு பயப்படுறா. அவன் போன் வேற ஸ்விச் ஆஃப்ணு வர்து. அவளும் வந்து என்ன நடக்குண்ணு பார்த்துட்டு போகட்டுமே"
"ஆமா. இங்க திரு நாள் நடக்குது. வந்து எல்லாரும் பார்த்துட்டுப் போங்க."

"ஏய். வீணாக கோபப்படாத. அவளுக்கும் போன் பண்ணி ஒரு ரூம் போட்டுரு."
"சரி. ஆங்... எங்க ஆபீஸர் பிரபு கிட்டயிருந்து ஏதாவது போன் வந்ததா?

"இல்லேப்பா. என்ன செய்தி? திடீர்னு கேக்கிற"

"சரி.. நாளைக்கு நாங்கள் அங்கே வந்து விட்டு என்ன செய்யட்டும்?"
"ஒண்ணு பண்ணுங்க. நேரா ஹோட்டலுக்குப் போய் ஃப்ரஸ் அப் ஆகிட்டு ஆஸ்பத்திரிக்கு வாங்க. என்ன செய்யணும்னு முடிவு பண்ணுவோம். என்னால எழும்ப முடிஞ்சா" என்று அவன் முடிப்பதற்குள்.

"உனக்கு அவ்வளவு பலமான அடியா?"
"அப்படின்னா நீ நம்பலியா?. யானை தூக்கி வீசியிருக்கிறது. வா! நேரிலே வந்து பாத்தியண்ணா எல்லாம் புரியும்"

"எலும்புலே ஏதாவது"
"நல்ல வேளை. விழுந்த எடத்துல செடியும் செத்தையும் கெடந்ததினால எலும்பு முறிவு ஒண்ணுமில்ல"

"எக்ஸ்ரே எல்லாம் எடுத்துப் பாத்தாச்சா?"
"எல்லா செக்கப்பும் முடிஞ்சாச்சு. அடிபட்டதில எழும்பி நடக்க முடியல. வா... எல்லாம் நாளைக்குப் பாக்கத்தான போற"

"ஆங், சொல்ல மறந்துட்டேன். நாளைக்கு கவிதாவும் அங்கே களக்காட்டுக்கு வாறா. அவளுக்கும் நாங்க தங்கிற ஹோட்டல் ரீமாவில ஒரு ரூம் போட்டுடு"
"அவ எதுக்கு இந்த நேரத்தில...?"

"ஏற்கனவே வசந்த் போன இடத்தில என்ன ஆச்சோண்ணு பயப்படுறா. அவன் போன் வேற ஸ்விச் ஆஃப்ணு வர்து. அவளும் வந்து என்ன நடக்குண்ணு பார்த்துட்டு போகட்டுமே"
"ஆமா. இங்க திரு நாள் நடக்குது. வந்து எல்லாரும் பார்த்துட்டுப் போங்க."

"ஏய். வீணாக கோபப்படாத. அவளுக்கும் போன் பண்ணி ஒரு ரூம் போட்டுரு."
"சரி. ஆங்... எங்க ஆபீஸர் பிரபு கிட்டயிருந்து ஏதாவது போன் வந்ததா?

"இல்லேப்பா. என்ன செய்தி? திடீர்னு கேக்கிற"

"ஒண்ணுமில்லே... அவர் எங்கள கண்காணிக்கிற மாதிரி தோணுது. அதான் கேட்டேன். சரி. நாளைக்கு வந்து சேரு. மற்றதெல்லாம் அப்ப பேசிக்கலாம்"

"சரி" , "அவ்வளவு தானா?"

நரேன் குரலில் வழிந்த காதலைப் புரிந்து கொண்ட நெய்லி, "சீ! ஏர்ப்போர்ட்டிலே இருக்கேன். அப்புறம் பார்க்கிறேன்"

"சரி, நாளைக்காவது உண்டா?"

"ஆமா, எப்பவும் அந்த ஞாபகத்திலே இரு..." போனை வைத்தாள் நெய்லி.

# நான்மாடக்கூடல்

## நூல் அனுபவம்

கவிதைத் தொகுப்பு ; கௌ ஆனந்த பிரபு ; நாற்கரம் வெளியீடு
முதல் பதிப்பு நவம்பர் 2025 ; பக்கம் 124 ; விலை ரூபாய் 150

#பேரன்பில்-முகிழ்க்கும்-அறத்தின்-பிள்ளைகள்

எண்ணத்தில் புதுமையும் எழுத்தில் தெளிவான கூர்சொற்களும் சிந்தனையின் விரியும் காட்சியென செறிவூட்டும் வரிகளாகவும் வெளிப்படுத்துவது என்ற தெளிவான சிந்தனையின் அடிப்படையில் 'நான்மாடக்கூடல்' நம் மனதிற்குள் உணர்வுகளை ஒன்றிணைக்கத் தூண்டுகிறது

"கடனுக்குப் பயந்து
ஓடி ஒளிந்தவனை விட அவளுக்குத்தான்
கம்பீரமாய் இருக்கிறது மீசை".

இல்லறம் நடத்துவதற்கு முடியாமல் ஓடி ஒளிந்து கொண்ட கணவனைப் பொருட்படுத்தாமல் சகல வித வேலைகளையும் தானே செய்து கொண்டு குடும்பத்தையும் வாழ்வையும் எதிர்கொள்ளும் துணிச்சல் மிக்க பெண்ணின் வலியை அருமையாக வெளிப்படுத்துகிறது இந்த வரிகள்.

"நீதி கேட்டுக் கதறும்
வட இந்தியப் பெண்ணின்
மொழி புரியாது போனாலும் வலியின் பொருட்டு
மீண்டும் எரியத் தொடங்கிற்று நான்மாடக் கடல்"

"வீதியில் சுற்றி திரிந்த நாய்க்குட்டியை
வீட்டிற்கு தூக்கி வந்திருக்கிறேன் "

எனத் தொடங்கும் கவிதையின் ஒவ்வொரு வரிகளும் அன்பையும் கருணையும் விதைத்துக்கொண்டே வந்து இறுதியில் நம் எல்லோருக்குள்ளும் படிந்திருக்கும் மற்றொரு முகத்தை அருமையாக வெளிப்படுத்துகிறது

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

உள்ளூர் முதல் உலக எழுத்தாளர்கள் வரை ஒவ்வொருவரது வரிகளையும் ஆழப் பதிந்து இருக்கும் மனதில் தான் படிமங்களும் தொன்மங்களின் நீட்சிகளும் இன்றைய காலத்தின் போக்கோடு இணைப்பதற்கான சாத்தியங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. அந்த வகையில் நூலின் பல்வேறு கவிதைகள் இவரது வாசிப்புத் திறனை முழுமையாக வெளிப்படுத்துகின்றன.

வறுமை எப்படி எல்லாம் இல்லறத்தை நிலைகுலைய வைக்கிறது என்பதையும் வருமானத்தை ஈட்டக்கூடிய தந்தை தனது பிள்ளைகளை வறுமையின் சுவடுக்குள் பார்ப்பதற்கு முடியாமல் தவிக்கும் தவிப்பையும் அதன் வழியே அவருக்குள்ளும் வெளிப்படும் தாய்மையின் கரிசனத்தையும் அழகாக படம் பிடிக்கிறது.

"மாதக் கடைசியில்
மகள் உறங்கிய பின்
வீடு அடைகையில்
அப்பாவின் முகச்சாயல் எனக்கு.

கேட்டதை மறந்து
காலையில் எழுந்து புன்னகைக்கையில்
அம்மாவின் முகச்சாயல் அவளுக்கு"

ஒற்றைக் கவிதை அப்பாவின் இயலாமையையும் அம்மாவின் தாய்மைப் பண்பையும் ஒருசேர மகளுக்குள் புகுத்தி விடும் முரண் சுவை அருமையாக வெளிப்படுகிறது.

"சேர்த்துக் கேட்ட இரண்டு ரூபாயை
வாதத்திறனைக் காண்பித்து ஒன்றாகக் குறைத்தேன். தேய்க்கையில்
கிடைத்தது என்று
நூறைத் தந்து
பெட்டிக்கரியைப்
பூசி விட்டுப் போகிறார்
இஸ்திரிக்காரர்"

கவிஞர் இளையவன் சிவா

## நூல் அனுபவம்

பணமா மனமா எது சிறந்தது என்பதை இதைவிட சிறப்பாக வெளிப்படுத்துவது கடினம்.

உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் சிந்தனைகளின் வழியே உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு எல்லோரையும் எளிதில் கவர்ந்து விடும் கட்டமைப்பாக கவிதை திகழ்ந்து வருகிறது. நீண்ட நெடிய பாதையும் கரடு முரடான பயணங்களில் நடந்து ஏற்படுத்திக் கொண்ட தடயங்களும் அதன் வழியே பெற்றுக் கொண்ட பெருமையும் உடைய தமிழ் கவிதைப் பரப்பில் இன்னும் எத்தனையோ எண்ணங்களுக்கு சொல் கொடுப்பதற்கு காத்திருக்கிறது தமிழ் மொழி. அத்தகு மொழியின் ரகசியங்களுக்குள் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு ஒவ்வொருவரது ஆழ் மனதையும் படித்து அதை சாகா வரம் பெற்ற வரிகளாக மாற்ற முயற்சித்திருக்கும் கவிஞரின் எண்ணங்கள் எளிய மனிதர்களின் வாழ்வியலையும் அவர்களது வேதனையையும் பகிர்ந்து கொள்கின்றன.

நூலில் பரவலாக மதுவின் மயக்கத்தில் இன்றைய சமுதாயம் எப்படி எல்லாம் விளைவுகளைச் சந்திக்கின்றன என்பதைக் குறித்து கோடிட்டுக் காட்டுவதுடன் பெண்களின் துயர் மிகுந்த வாழ்வின் மீதான கருணையும் பேரன்பும் வெளிப்படும் கவிதைகளும் அவர்களுக்கு பெரு நம்பிக்கையை ஊட்டக்கூடிய மன உறுதியை வெளிப்படுத்துகின்றன.

அம்மாவின் மேன்மையைப் பேசும் கவிதைகளுக்கு நேர் எதிராக அப்பாவின் விட்டேத்தித்தனத்தை குடும்பத்தைக் கண்டு கொள்ளாத மனநிலையை கேள்வி கேட்கின்றன.

வட இந்தியத் தொழிலாளர்கள் மீதான இன்றைய சமூகத்தின் பொதுப் புத்தியும் அதன் விளைவாக அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களும் அவர்களும் மனிதர்கள் என்ற அடிப்படையை மறந்து அவர்களை நாம் நடத்தும் விதமும் கவிஞருக்குள் நிறைய வினாக்களை எழுப்பி இருக்கின்றன. அதுவே அவர்களைப் பற்றிய புதியதொரு நேர்மறைச் சிற்பத்தை வடிப்பதற்கு அவருக்கு வழி அமைத்து விடுகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

தீண்டாமை, வர்க்க பேதங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வன்முறை, பழிவாங்கும் போக்கு, சாதியம், வெறுப்பு அரசியல் என பல்வேறு குணங்களில் மனிதனில் இருந்து விடுபட்டு விலங்குத் தன்மையை வெளிப்படுத்தும் இன்றைய சூழலில் நூலின் ஒவ்வொரு கவிதைகளும் அவற்றை எடுத்துரைத்து அதிலிருந்து வெளியேறுவதற்கு நல்லதொரு நம்பிக்கையையும் விதைத்து விடுகிறது.

" நீங்கள் பரணி எழுதிக் கொண்டிருக்கையில்" என்ற கவிதை.

"வரலாறு எங்கும் வழி நெடுக நிற்கும்
உங்கள் பதாகைகள் குறித்து ஒன்றுமில்லை
எங்கள் உடலைத் துளைத்து நடப்பட்டதற்காகவேனும்
எங்கள் துயர் குறித்து
ஒரு வரி எழுதி இருக்கலாம் இல்லையா?"

சனாதன தர்மத்தின் மீதான இந்தக் கவிதை பேசும் ஆழமான கருத்துக்கள் எழுப்பும் வினாக்களுக்கு யார் பொறுப்பேற்பது?

"அரூபநாகம் ஒன்று ஆண்டாண்டு காலமாய் பாதத்தில் பிறந்ததாய் பிதற்றியபடி எங்களை தீண்டிக்கொண்டே இருக்கிறது
அதன் நஞ்சின் வீரியத்தை தலைமுறைகள் கடந்தும்
முறிக்க இயலவில்லை

---


நந்தனாருக்கு வழிவிட்டு நந்தியின் கதை சொல்லி பரம்பொருளின்
கருணையை துதிக்கின்ற அதன் இரட்டை நாக்கு ஒருபோதும்
ஓதியதில்லை
கருவறைக்குள் அருள்பாலிக்கும் கருப்பசாமியையும் வேட்டைமுனியையும் "

வைகை நதிக்கரையில் உயிர்ப்பித்து நொய்யல் நதிக்கரையில் உடல் வளர்க்கும் கவிஞருக்குள் நதிகளின் வழியே பிறந்த நாகரிகங்களும் அவை வளர்த்துவிட்ட மனிதர்களின் குணநலன்களும் மிகச் சிறப்பாக பதிந்து கிடக்கின்றன. அவையே நூலுக்குள் நல்லதொரு சொல் உழவை நிகழ்த்தி இருக்கின்றன.

### வாழ்க்கைக் குறிப்பு

தி.வே. கோபாலையரின் - பிறப்பு 22 சனவரி 1926 ; பெற்றோர் வேங்கடராம ஐயர், இலக்குமி அம்மாள். பள்ளியிறுதி வகுப்பினை கோபாலையர் 1940 இல் நிறைவு செய்தார். 1945 இல் தமிழ் வித்துவான் தேர்வில் தேறி முதல் தகுதியாக ஆயிரம் உரூபா பரிசு பெற்றார். 1951 இல் பி.ஓ.எல். பட்டம் பெற்று இலாசரசு பதக்கம் பெற்றவர். 1953 இல் பண்டிதம் தேறி முதல் தகுதியாக 100 உருபா பரிசு பெற்றவர். பி.ஓ.எல். (சிறப்பு) 1958 இல் முதல் தகுதி பெற்று அரங்கையா செட்டியார் பரிசைப் பெற்றவர். தி.வே. கோபாலையர் அவர்கள் 15 ஆண்டுகள் உயர்நிலைப்பள்ளியில் பணிபுரிந்தவர்.

### கல்லூரிப் பணி



15 ஆண்டுகள் தமிழகத்தின் பல கல்லூரிகளில் பணிபுரிந்தவர். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் இவர் பணிபுரிந்த போது மிகச்சிறந்த தமிழ்ப் புலவர்களை உருவாக்கியவர். (பேராசிரியர் தா.ம. வெள்ளை வாரணம், முனைவர் கு. சுந்தரமூர்த்தி உள்ளிட்டவர்கள்). 1979 முதல் புதுச்சேரியில் அமைந்துள்ள பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தில் (EFEO) தம் ஆய்வுப்பணியைத் தொடங்கி இறுதிக் காலம் வரை மிகச்சிறப்பாகச் செய்தவர்.

### சொற்பொழிவாளர்

தி.வே. கோபாலையர் கல்லூரிப் பேராசிரியராகப் பணிபுரிந்ததுடன் தலைசிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கியவர். பல ஊர்களில் தமிழ் நூல்களைச் சொற்பொழிவாற்றி மக்களுக்கு அறிமுகம் செய்தவர். பல இதழ்களில், ஆய்வுக்கட்டுரைகள் வரைந்தவர். பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டு தம் ஆழ்ந்த புலமையையும் நினைவாற்றலையும் வெளிப்படுத்திக் கற்றவர்களுக்கு வியப்பினை ஏற்படுத்தியவர்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**எழுதிய சில நூல்கள்**

- தொல்காப்பியச் சேனாவரையம் - வினா விடை விளக்கம்
- கம்பராமாயணத்தில் முனிவர்கள் - 1994
- கம்பராமாயணத்தில் தம்பிமார்கள் - 2 தொகுதி 1995, 1996
- கம்பராமாயத்தில் தலைமைப் பாத்திரங்கள் - 1998
- சீவக சிந்தாமணி - காப்பிய நலன் - 1999
- கம்ப ராமாயணப் படலச் சுருக்கம்
- பால காண்டம் - 1999
- அயோத்தியா காண்டம் - 1999
- சுந்தர காண்டம் - 1999
- உயுத்த காண்டம் - 2000
- சீவக சிந்தாமணியின் இலம்பகச் சுருக்கம் - 2002

**மொழிபெயர்ப்பு நூல்களுக்குத் துணை நின்றமை**

- எசு.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் ஆங்கில நூலின் சோழர் காலப் கலைப்பணி - தமிழ் ஆக்கம்
- ஆலன் டேனியலுவின் "மணிமேகலை' ஆங்கில மொழிபெயர்ப்பு
- சேனாவரையத்தின் பிரெஞ்சு மொழி ஆக்கம்.
- நடத்திய சித்தாந்த வகுப்புகள்
- உண்மை விளக்கம்
- திருவருட் பயன்.
- ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள்
- பெரிய புராணம்
- கம்ப ராமாயணம்
- சீவக சிந்தாமணி
- திங்கள்தோறும் சதயத் திருநாளில் திருவாமூரில் திருமுறை விளக்கவுரை

### பெற்ற பட்டங்களும் விருதுகளும்

தருமையாதீனத் திருமடம் ""செந்தமிழ்க் கலாநிதி - 1994
திருப்பனந்தாள் காசித் திருமடம் ""சைவ நன்மணி - 1997
திண்டிவனம் கேள்விச் செல்வர் மன்றம் ""அறிஞர் திலகம் - 1978
மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றம் ""சிந்தாமணிக் களஞ்சியம் - 1996
புதுச்சேரித் தமிழ்ச் சங்கம் - ""நூற்கடல் - 1982
புதுச்சேரி அரசு - ""கலைமாமணி - 2002
சென்னை - வடமொழிச் சங்கம் ""சாகித்திய வல்லப - 2002
பொங்கு தமிழ் விருது - 2003
தமிழக அரசு - திரு. வி. க. விருது - 2005
சடையப்ப வள்ளல் விருது - 2006
கபிலர் விருது - 2006

### மறைவு

தி. வே. கோபாலையர் 2007 ஏப்ரல் 1 அன்று மாலை ஐந்து மணிக்கு திருச்சி, திருவரங்கத்தில் தம் 82 ஆம் வயதில் இயற்கை எய்தினார்.



https://ta.wikipedia.org/s/tv8

# நாளை நமதே

## பணத்தால் சாதிக்க முடியாததை கூட, முயற்சியால் சாதித்து காட்ட முடியும்

அகர முதல இலக்கிய பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com